**அகுரெஸ்ஸ பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அகுரெஸ்ஸ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அகுரெஸ்ஸ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 11,172,971 தொகை மற்றும் சபை அலுவலக கணினி வலையமைப்பு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 540,000 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,428,050 பெறுமதியான தளபாட உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் மற்றும் பொதுக் களஞ்சிய இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் கீழ் கணிக்கப்படும் ரூபா 1,428,050 தொகைக்கான தளபாட உபகரணங்களின் பெறுமதியை பொதுக் களஞ்சிய இருப்பு மீதியில் இருந்து அகற்றி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதி வரை உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 5,468,084 மீதிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிலையான சொத்துக்கள் தன்மையில் காணப்படாத பொருட் பதிவேட்டு மற்றும் நுகர்வு தன்மையுள்ள உபகரணங்கள் மற்றும் பண்டங்கள் 46 வகையை சேர்ந்த ரூபா 238,355 தொகை பெறுமதியான 744 விடயங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொருட் பதிவேட்டு தன்மையுள்ள பண்டங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் இருந்து அகற்றப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பு ரூபா 899,294 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையை சரி செய்வதற்காக நாட்குறிப்பு பதிவு இலக்கம் 13 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு ரூபா 353,247 தொகை வரவு வைக்கப்பட்டு அந்தப் பெறுமதி பொதுக் களஞ்சிய இருப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இருப்பு ரூபா 1,252,541 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் அடங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 229,509,491 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே கூட்டுத்தொகை ரூபா 81,262,818 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | வித்தியாசத்துக்கான காரணங்களை இனங்கண்டு எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 17,133,372 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 23,377,354 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 3100 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு 1220 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையில் 2022 | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அலகுகளில் இருந்து ரூபா 1,853,144 இற்கான நிலுவை மீதி காணப்பட்டது. | மே 31 திகதியில் உள்ளவாறு ரூபா 259,959 இற்கான தொகை ஒன்று அறவீடு செய்யப்பட்டது என. | |

**(ஆ) கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 227 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டு இருந்ததுடன் வருட இறுதியில் உள்ளவாறு 164 கடையறைகளில் இருந்து ரூபா 7,874,096 இற்கான நிலுவை கடை வாடகையும், தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் 24 கடையறைகளில் இருந்து ரூபா 5,464,236 இற்கான ஒரே முறையில் பெறப்படும் பணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. 2022 மே 31 திகதி வரை அவற்றில் நிலுவைக் கடை வாடகை ரூபா 1,422,808 தொகை மற்றும் 03 கடையறைகளுக்குரிய ஒரே முறையில் பெறப்படும் பணம் ரூபா 1,578,500 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைக் கடை வாடகை வருமானத்தில் ரூபா 1,422,808 தொகை மற்றும் 03 கடையறைகளில் இருந்து ஒரே முறையில் பெறும் பணம் ரூபா 1,578,500 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கட்டளை/ பிரமாணங்களின் படி செயற்படாமையால் அங்கீகாரம் மறுதலிக்கப்பட்டிருந்த 06 கட்டிட விண்ணப்பங்களுக்குரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டதுடன், பிரதேச சபையின் நகர அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் 02 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிப்போரை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் கட்டளை/ பிரமாணங்களில் உள்ளடங்கிய 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூபா 4,602,742 இற்கான கட்டணங்கள் அறவீடு செய்து நிர்மாண வேலை முறைப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் பூர்த்தியான கிராமம் மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2020 ஆண்டின் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் மற்றும் ஆளுனர் செயலக ஏற்பாடுகளின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் வடிகால்கள் பக்கச் சுவர்கள் மற்றும் 07 சதுர மதகுகள் நிர்மாண வேலைகளுக்குரிய சட்டகங்கள் தயாரிக்கும் போது தென் மாகாண பொறியியல் சேவை அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தி இருந்த CT-036 விகிதத்துக்கு பதிலாக ST-057 விகிதத்தை பயன்படுத்தி இருந்தமையால் 2019 ஆண்டில் முதல் அரையாண்டின் கூறுவிலைகளின் படி ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 267 வீதம் சட்டகம் 665.64 சதுர அடிக்காக ரூபா 177,726 தொகை ஒப்பந்தகாரருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கொங்கிரீட் வடிகால்கள் பக்கச் சுவர்கள் மற்றும் சதுர மதகுகள் போடப்படல் வீதி அபிவிருத்தி அலுவல்களுக்கு உரிய செயற்திட்டமாக காணப்பட்டமையால் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது என. | பொருத்தமான மற்றும் அனுகூலமான விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |